# குடும்பத்தினருக்கான பள்ளி ஆண்டுத் தகவல்

இது ddsb.ca, பயனுள்ள ஆதாரங்கள் மற்றும் பள்ளி ஆண்டுக்கு உங்களைத் தயார்படுத்துவதற்கான பொதுவான உதவிக்குறிப்புகள் பற்றிய முக்கியத் தகவல்களை கண்டறிவதற்கான பட்டியல்.


## பள்ளி ஆண்டுத் தகவல் மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

நமது பள்ளி ஆண்டுத் தகவலுக்கான வலைப்பக்கம் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி ஆண்டு தொடங்குவதற்கு முன்பே புதுப்பிக்கப்பட்டு, பள்ளி நாள் எப்படி செயல்படும், பள்ளிகளில் நிலவும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் பற்றிய தகவல்களை உள்ளடக்கியிருக்கும்.

## DDSB இணையதளத்தில் கூகுள் டிரான்ஸ்லேட்டை எவ்வாறு பயன்படுத்துவது

DDSB இணையதளத்தை கூகுள் டிரான்ஸ்லேட் மூலம் எளிதாக பல மொழிகளில் மொழிபெயர்க்கலாம். ஒவ்வொரு DDSB வலைப்பக்கத்திலும், பக்கத்தின் மேலே உள்ள பூதக்கண்ணாடி ஐகான் அல்லது தேடல் அம்சத்திற்கு அடுத்துள்ள பேனரில், **Select Language (மொழியைத் தேர்வுசெய்)** அம்சத்தைக் காண்பீர்கள்.


1. கணினி அல்லது லேப்டாப் சாதனத்தில் ddsb.ca -க்குச் செல்லவும்.
2. வலைப்பக்கத்தின் மேலே உள்ள பேனரில் உள்ள **Select Language (மொழியைத் தேர்வுசெய்)** பொத்தானைக் கிளிக் செய்யவும்.
3. பட்டியலில் இருந்து உங்களுக்கு விருப்பமான மொழியைத் தேர்ந்தெடுக்கவும்.





# உங்கள் பிள்ளையின் பள்ளியிலிருந்து செய்திகளைப் பெற Subscribe (குழுசேரவும்) செய்யவும்

உங்கள் பிள்ளையின் பள்ளியிலிருந்து நேரடியாக பள்ளி செய்திமடல்கள் போன்ற செய்திகளைப் பெற குடும்பத்தினருக்குத் தேவையான செயற்படிகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன:

1. எந்தவொரு பள்ளியின் முகப்புப்பக்கத்திலும் **School News (பள்ளிச் செய்திகள்)** பிரிவில் **More News (மேலும் செய்திகள்)** என்பதைக் கிளிக் செய்யவும்.



2. **Subscribe (குழுசேர்)** பொத்தானைக் கிளிக் செய்யவும்.




3. பள்ளி இணையதளத்தில் நீங்கள் Subscribe (குழுசேர) செய்ய விரும்பும் அனைத்து பெட்டிகளையும் சரிபார்க்கவும். நீங்கள் பள்ளிச் செய்திகள் (செய்திமடல்கள்) மட்டுமே பெற விரும்பினால், **பள்ளிச் செய்திகளை** மட்டும் பார்க்கவும்.

பார்த்து முடித்த பிறகு, செய்திகள் இடுகையிடப்பட்டவுடன் பள்ளி இணையதளம் அனைத்து Subscribe -களுக்கும் (சந்தாதாரர்களுக்கும்) அதுப்பற்றி மின்னஞ்சல் அனுப்பும். மேலும் உதவிக்கு, உங்கள் பள்ளியில் உள்ள ஊழியர்களைத் தொடர்பு கொள்ளவும்.

# பள்ளி ஆண்டு காலண்டர்கள்

வழக்கமான தொடக்கப்பள்ளி, மாற்றியமைக்கப்பட்ட தொடக்கப்பள்ளி, வழக்கமான மேல்நிலைப்பள்ளி மற்றும் மாற்றியமைக்கப்பட்ட மேல்நிலைப்பள்ளி திட்டங்களுக்கான பள்ளி ஆண்டு காலண்டர்கள் மற்றும் திட்டமிடப்பட்ட சட்ட ரீதியான விடுமுறை நாட்களின் சுருக்கம் மற்றும் DDSB இணையதளத்தில் P.A. நாட்கள் ஆகியவற்றை நீங்கள் காணலாம்.

## Parent Portal

Parent Portal என்பது அனைத்து டர்ஹாம் மாவட்ட பள்ளி வாரிய பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கும் காணக்கிடைக்கிறது.

போர்ட்டல் மூலம் உங்கள் பிள்ளையின் வீட்டுப்பாட ஒதுக்கீடு, வருகை வரலாறு மற்றும் கிரேடுகளைப் பார்க்கலாம். SchoolCash Online மற்றும் SchoolMessenger கணக்குகளை போர்டல் மூலம் அமைக்கலாம். மேலும் தகவலுக்கு மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளைப் பார்க்க, Parent Portal வலைப்பக்கம் என்பதைப் பார்வையிடவும்.

## விடுப்பு ஒன்றை அறிக்கையிடுதல்

டர்ஹாம் மாவட்ட பள்ளி வாரியம் மாணவர்கள் விடுப்பை அறிவிக்க ஆன்லைன் SchoolMessenger சேவையைப் பயன்படுத்துகிறது. உங்கள் பிள்ளையின் விடுப்பு தகவலை நீங்கள் பின்வரும் முறைகளில் அறிக்கையிடலாம்:

- 1-844-350-2646 -ஐ அழைப்பதன் மூலம்
- ஆன்லைனில் அல்லது உங்கள் ஸ்மார்ட்போனில் SchoolMessenger பயன்பாடு மூலம்

உங்களிடம் SchoolMessenger கணக்கு இல்லையென்றால், மேலும் ஒன்றை உருவாக்க விரும்பினால், கீழே உள்ள செயற்படிகளைப் பின்பற்றவும்:

1. SchoolMessenger இணையதளம் என்பதற்குச் செல்லவும்.
2. பதிவேட்டில் பதிவாகியுள்ள உங்களின் அதே மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும் (உங்கள் Parent Portal கணக்கிற்கு நீங்கள் பயன்படுத்திய அதே மின்னஞ்சல் முகவரி.)
3. கடவுச்சொல் ஒன்றை உருவாக்கவும்.
4. உங்கள் மின்னஞ்சலைச் சரிபார்த்து, உங்கள் கணக்கைச் சரிபார்க்கவும்.

உங்கள் உள்நுழைவு தகவலை உங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம் மற்றும் உங்களுக்கான தகவலைப் பாதுகாப்பாக வைக்கவும். பயன்பாட்டின் மூலம் நீங்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட பிள்ளைகளைப் பதிவுசெய்திருந்தால், எந்த பிள்ளை என்பதைத் தேர்ந்தெடுக்க விருப்பங்கள் மெனுவைப் பயன்படுத்தவும். இந்த மெனு திரையின் மேற்புறத்தில் இருக்கும் (மொபைல் பயன்பாட்டிற்கு மேல் இடதுபுறத்தில்). நீங்கள் ஆன்லைன் கணக்கை உருவாக்க விரும்பவில்லை எனில், உங்கள் பிள்ளையின் விடுப்பு தகவலை

அறிக்கையிட 1-844-350-2646 என்ற எண்ணை அழைத்து மேலே தொடரலாம்.

### SchoolCash Online

SchoolCash Online என்பது DDSB அனைத்துப் பள்ளிகளிலும் கூடுதல் பாடத்திட்ட நடவடிக்கைகளுக்காக வசூலிக்கப்பட்ட நிதியை நிர்வகிக்கப் பயன்படுத்தப்படும் தளமாகும். உங்கள் பிள்ளைகளின் பள்ளிக் கட்டணத்தைச் செலுத்த இது ஒரு எளிதான மற்றும் பாதுகாப்பான வழியாகும். பெற்றோர்/பாதுகாவலர்கள் SchoolCash மூலம்பயனர் பதிவு வலைப்பக்க கணக்கைப் பதிவு செய்யலாம். ஒரு கணக்கை அமைத்தவுடன், SchoolCash -ஐ Parent Portal மூலம் அணுகலாம். உள்நுழைவு வழிமுறைகள், கட்டணம் செலுத்துதல், மின்னஞ்சல் அறிவிப்புகள் அல்லது பாதுகாப்பு செயல்முறைகள் தொடர்பான உதவிக்கு, SchoolCash Online உதவி மையத்தை பார்வையிடவும் அல்லது 1-866-961-1803 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

## டிஜிட்டல் கற்றல் மற்றும் சாதன ஆதரவு

Chromebooks மூலம் 7-12 வகுப்புகளில் உள்ள மாணவர்கள் மற்றும் DDSB@Home மூலம் கற்றுக்கொள்பவர்கள் நமது டிஜிட்டல் கற்றல் மற்றும் சாதன ஆதரவு வலைப்பக்கத்தின் மூலம் ஆதரவை அணுகலாம். இந்த பக்கத்தில் பிழைகாணல், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள், ஆன்லைன் பாதுகாப்பு மற்றும் உங்கள் Chromebook சாதனத்தை எவ்வாறு பராமரிப்பது போன்ற தகவல்கள் உள்ளன.

## மனநலம் மற்றும் நல்வாழ்வு வளங்கள்

மனக்கவலை, மனச்சோர்வு அல்லது வேறு ஏதேனும் மனநலப் பிரச்சனையுடன் மாணவர்கள் போராடினால், தங்கள் பள்ளியில் உள்ள ஒருவரைத் தொடர்பு கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒரு வழிகாட்டி ஆலோசகர் அல்லது ஆசிரியர் உதவலாம். கூடுதலாக, DDSB இணையதளத்தின் நல்வாழ்வு மற்றும் மனநலம் வலைப்பக்கம் மாணவர்கள், பெற்றோர்/பாதுகாவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நல்வாழ்வு ஆதாரங்களை வழங்குகிறது.

மனநலம் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதலை நிர்வகிக்கும் செவிலியர்கள் மற்றும் சமூகம் சார்ந்த மனநலப் பணியாளர்கள்

ஆகியோருடன் சமூக சேவையாளர்கள், உளவியலாளர்கள் மற்றும் உளவியல் கூட்டாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய நிபுணர்களின் குழுவும் நம்மிடம் உள்ளது. மனநலப் பணியாளரிடம் நீங்கள் பேச விரும்பினால், உங்கள் தொடர்புத் தகவலை எங்களுக்கு வழங்க மனநல உதவிப் படிவத்தைப் பயன்படுத்தவும் மற்றும் குழுவின் உறுப்பினர் ஒருவர் விரைவில் உங்களைத் தொடர்புகொள்வார். **தயவுசெய்து கவனிக்கவும்: இது அவசர சேவை அல்ல. அவசரநிலை என்றால், 911 -ஐ அழைக்கவும்.**

## மழலையர் பள்ளி பதிவு

டர்ஹாம் மாவட்ட பள்ளி வாரியத்திற்கு (DDSB) மழலையர் பள்ளியில் சேரும் அனைத்து புதிய மாணவர்களுக்கும் ஆன்லைன் பதிவு தேவைப்படுகிறது. உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் ஒரு பள்ளியைக் கண்டுபிடித்து மழலையர் பள்ளிக்கு மாறுவதற்கு உதவ நாங்கள் இருக்கிறோம்.

மழலையர் பள்ளியில் சேருவதற்கு உங்கள் பிள்ளை பின்வரும் வயதுத் தேவைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்:

- ஜூனியர் மழலையர் பள்ளிக்கு பதிவு செய்ய, நடப்பு ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் உங்கள் பிள்ளைக்கு 4 வயது முடிந்திருக்க வேண்டும்.
- மேல்நிலை மழலையர் பள்ளிக்கு பதிவு செய்ய, நடப்பு ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதிக்குள் உங்கள் பிள்ளைக்கு 5 வயது முடிந்திருக்க வேண்டும்.

மழலையர் பள்ளியில் ஒரு பிள்ளையை பதிவு செய்ய:

1. உங்கள் வசிப்பிடப் பகுதியில் உள்ள நியமிக்கப்பட்ட பள்ளிகளைக் கண்டறியப் பள்ளி இருப்பிடக் கருவியைப் பயன்படுத்தவும்.
2. பெற்றோர் கணக்கு ஒன்றை உருவாக்கவும் அல்லது ஏற்கனவே உள்ள உங்கள் கணக்கில் உள்நுழையவும்.
3. உங்கள் பெற்றோர் கணக்கு உருவாக்கப்பட்டவுடன், சரியான பள்ளி ஆண்டைத் தேர்ந்தெடுக்கவும்.

அனைத்து மாணவர்களும் மழலையர் பள்ளி திட்டத்திற்காக அவர்களின் 'நியமிக்கப்பட்ட வசிப்பிடப் பகுதியில் இருக்கும் பள்ளியில்'

பதிவு செய்ய வேண்டும். பள்ளி இருப்பிடக் கருவியைப் பயன்படுத்தி உங்களது நியமிக்கப்பட்ட வசிப்பிடப் பகுதியில் இருக்கும் பள்ளியைக் கண்டறிவதில் சிரமம் இருந்தால் அல்லது பள்ளி எல்லைகள் குறித்த கேள்விகள் இருந்தால், Planning.Department@ddsb.ca என்ற மின்னஞ்சல் மூலமாக அல்லது 905-666-6421 என்ற தொலைபேசி எண் மூலமாக எங்கள் சொத்து மற்றும் திட்டமிடல் துறையைத் தொடர்புகொள்ளவும்.

நமது பிரெஞ்சு இம்மர்ஷன் (FI) திட்டத்தில் ஆர்வமுள்ள குடும்பங்கள், அவர்கள் **ஒன்றாம் வகுப்பிற்குள் சேர்வதற்கு முன், வசந்த காலத்தில்**, அருகிலுள்ள சிங்கிள் டிராக் பிரெஞ்சு இம்மர்ஷன் பள்ளிக்கு தங்கள் பிள்ளையை மாற்றலாம்.

ஆன்லைன் பதிவுகள் அனைத்துமே கோரிக்கைகள்தான், மேலும் அவை இறுதி செய்யப்பட்ட பதிவுகள் அல்ல. பள்ளி நிர்வாகிகள் பதிவு செய்யும் செயல்முறையை முடிக்க, குடும்பத்தினர் / பராமரிப்பாளர்களுடன் பள்ளிக்கு வருகை புரியுமாறு சந்திப்புகளை அமைப்பார்கள், மேலும் தங்கள் பிள்ளையை பதிவு செய்ய பொருத்தமான ஆவணங்களைக் கொண்டு வரும்படி அவர்கள் கேட்கப்படுவார்கள்.

பள்ளி ஆண்டின் இடையில் மழலையர் பள்ளியில் பதிவு செய்ய உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், உங்களுக்கான நியமிக்கப்பட்ட வசிப்பிடப் பகுதியில் இருக்கும் பள்ளியில் உள்ள அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும். பள்ளிகளுக்கான தொடர்பு தகவல் பள்ளி கோப்பகத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது. ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், EarlyYears@ddsb.ca என்ற மின்னஞ்சல் மூலமாக அல்லது 905-666-5500 நீட்டிப்பு எண் 5440 என்ற எண்ணில் தொலைபேசி மூலமாக ஆரம்ப ஆண்டுத் துறையை அணுகலாம்.

## போக்குவரத்து

டர்ஹாம் மாவட்ட பள்ளி வாரியம் (DDSB) தகுதியுள்ள மாணவர்களுக்கு டர்ஹாம் மாணவர் போக்குவரத்து சேவைகள் (DSTS) உடன் இணைந்து போக்குவரத்து வசதிகளை வழங்குகிறது. மேலும் தகவலுக்கு மற்றும் போக்குவரத்துக்கான தகுதியை உறுதிப்படுத்த https://www.dsts.on.ca/ -ஐப் பார்வையிடவும்.